1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, அடிஷனல் பப்ளிக் பிராசிகூட்டர் என்று ஒருவர் இல்லையே தவிர அந்த வேலை நடைபெறுமலில்லை. காரணம், பப்ளிக் பிராசிகூட்டர் அந்த வேலையைச் சேர்த்துப் பார்க்க வேண்டுமென்று ஒரு நிரந்தர உத்தரவு இருக்கிறது. 18—2—1974-ல் ஒரு புதிய நபர் அந்தப் பதவியில் சேர்ந்திருக்கிறார்.

Collapse of Harijan Colony as a result of Heavy Rain

* 316 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that about 20 houses collapsed in the Harijan Colony at Tirupathi Saram, Thovalai taluk, Kanyakumari district, on account of stagnation of rain water as a result of the heavy rains during 1970;

(*b*) whether any representation has been received, requesting assistance for the reconstruction of those houses; and

(c) if so, the action taken thereon?

பெரு மழையினால் பாதிக்கப்பட்ட அரிசனக் குடியிருப்பு

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலூகா, திருப்பதி சாரத்தில் உள்ள அரிசனக் குடியிருப்பில் 1970-ம் ஆண்டு பெய்த பெருமழையினால், தண்ணீர் பெருக்கெடுத்து தேங்கி நின்றதால் சுமார் 20 வீடுகள் வீழ்ந்தன என்பது உண்மையா?

(இ) அந்த வீடுகளை திருப்பிக் கட்டுவதற்கு உதவி கேட்டு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) 27 வீடுகள் பாதிக்கப்பட்டன.

(இ) ஆம்.

(உ) பாதிக்கப்பட்ட 27 நபருக்கும் தலா ரூபாய் 30 உதவித் தொகையும், ரூபாய் 10 துணிகள் வாங்குவதற்கும் மொத்தத்தில் ரூபாய் 1,080 நிவாரணம் வழங்கப்பட்டது. வீடுகளைத் திருப்பிக் கட்டுவதற்கு கடன் வழங்கும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, 1970 ஆம் ஆண்டில் பெய்த பெருமழையின் காரணமாக வீழ்ந்த வீடுகள் 27-ல், 20 அரசாங்கத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட ஹரிஜன காலனி வீடுகளாகும். அந்த 20 வீடுகளும் மழையில் இடிந்து வீழ்ந்து விட்டன. கூரை சாமான்கள், கம்புகள், கதவுகள், ஆகிய வற்றையெல்லாம் அந்த மக்கள் எடுத்து வைத்திருந்தார்கள் திரும்பக் கட்டிக் கொள்வதற்கு ரூபாய் 1,000 கடனைக் கேட்டார்கள். அவைகள் அரசாங்கக் கட்டிடங்களானதால், அவற்றை தனியார் ஒன்றும் செய்யக்கூடாது, அதற்காக கடனும் கொடுக்க வாய்ப்பு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அந்த ஏழை களின் வீடுகளை உடனடியாகச் சீர் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, ரூபாய் 1,000 மான்யமாகக் கேட்டார்கள். ஹரிஜன இலாகா அரசாங்க வீடுகளுக்குத் திரும்பக் கட்டிக் கொள்வதற்கு மான்யமும் கொடுக்க முடியாது என்று தெரி வித்துள்ளது. தக்காலிக் கடனைக் கொடுப்பதற்கு அந்த இலாகா நடவடிக்கை கள் எடுத்து அரசுக்குக் குறிப்பு அனுப்பியிருக்கிறது. விரைவில் பரிசீலித்து, முடிவு எடுக்கப்படும்.

Artificial Insemination Centre of the Veterinary Department.

*317 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that an Artificial Insemination Centre of the Veterinary Department is situated at the entrance of Shri Brahadeeswara Temple, Thanjavur; and

(b) if so, whether there is any move to shift it to any other suitable place?

கால்நடை மருத்துவத்துறையைச் சேர்ந்த செயற்கை முறை கருத்தரிப்பு நிலையம்

திரு. எல். பலராமன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதி லளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர், அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலயத்தின் நுழைவாயிலில், கால்நடை மருத்துவத் துறையைச் சேர்ந்த செயற்கை முறை கருத்தரிப்பு நிலையம் ஒன்று அமைந்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அதனை வேறோர் தகுந்த இடத்திற்கு மாற்ற செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?